ESTD : 1947

விருதுநகர் இந்து நாடார்கள் செந்திக்குமார நாடார் கல்லூரி
(தன்னாட்சி)
தேசிய தர மதிப்பீட்டின் கீழ் 'A+' அந்தஸ்து பெற்றது
விருதுநகர்

*****

28.09.2026

## நுண்கலை மன்றம்

## சுற்றறிக்கை

தமிழ்நாடு காவல்துறையின் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை சார்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு நலன் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக கல்லூரி மாணவர்களுக்கிடையே மாநில அளவிலான குறும்படப் போட்டி நடத்தப்படுகின்றது. பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கிலும் அவர்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் நோக்கிலும் இப்போட்டி நடத்தப்படுகின்றது. கீழ்க்காணும் விதிமுறையின்படி குறும்படம் எடுக்கப்பட வேண்டும். கலந்து கொள்ள விருப்பம் உள்ள மாணவ / மாணவியர்கள் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் திரு. K.J. செந்தில்குமார் அவர்களைச் சந்திக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

**தலைப்பு (ஏதேனும் ஒன்று) :**

1. பெண்களின் பாதுகாப்பில் ஆண்களின் பங்கு.
2. குற்றச் சம்பவங்களைத் தடுப்பதில் பார்வையாளரின் தலையீடு.
3. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதில் சமூகத்தின் பங்கு.

**விதிமுறைகள்**

- இரண்டு நிமிடங்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
- தனிநபராகவோ அல்லது ஐந்து உறுப்பினர்களுக்கு மிகாமல் கொண்ட குழுவாகவோ இருத்தல் வேண்டும்.
- குறும்படம் அனுப்பக் கடைசி நாள் 09.10.2026.

**பரிசு விபரம்**

| | |
|---|---|
| முதல் பரிசு | - ரூ. 50,000/- |
| இரண்டாம் பரிசு | - ரூ. 25,000/- |
| மூன்றாம் பரிசு | - ரூ. 15,000/- |

28/9/26

கல்லூரி முதல்வர்

பெறுநர்

மாணவ, மாணவியர் வகுப்புச் சுற்றறிக்கை துறைத் தலைவர் மூலமாக.